Source: *Tamil Murasu*, p2
Date: 31 August 2016


ஐநா தலைவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம்– சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் வழங்கியது

ஐநா தலைவர் பான் கி மூன் ஆற்றியுள்ள மனிதாபிமான தொண்டுகளையும் மனித உரிமைகள், உலக அமைதி, உலகப் பாதுகாப்பு, பொருளியல், இயற்கை வள மேம்பாடு ஆகிய வற்றுக்கு அவர் செய்துள்ள பணிகளையும் அங்கீகரித்துப் பாராட்டும் வகையில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் ஆக உயரிய கவுரவ டாக்டர் பட் டத்தை அவருக்கு அளித்துச் சிறப்பித்திருக்கிறது.

இஸ்தானாவில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் அந்தப் பட்டத்தை அதிபர் டோனி டான் கெங் யாம் அவருக்கு வழங்கி னார். தென் கொரியரான திரு பான், 2007ல் ஐநா தலைவ ரானார். 2011ல் அவர் மீண்டும் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டார். திரு பானின் பதவிக் காலம் வரும் டிசம்பரில் முடி வடைகிறது.

சோல் தேசிய பல்கலைக் கழகத்தில் படித்த திரு பான், பிறகு அமெரிக்காவில் கென்னடி அரசாங்கப் பள்ளி யில் சேர்ந்து படித்தார்.

கவுரவ பட்டம் வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய பல்கலைக் கழகத் தலைவர் டான் சோர் சுவான், சிறுவயதிலேயே கொரிய போரினால் பாதிக்கப் பட்ட திரு பானுக்கு ஐநா பற்றி அப்போதே தெரியும் என்று குறிப்பிட்டார்.



அதிபர் டோனி டானுடன் ஐநா தலைமைச் செயலாளர் பான் கி மூன் (இடது). இஸ்தானாவில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டத்தை பல்கலைக் கழக வேந்தருமான அதிபரிடமிருந்து திரு பான் பெற்றுக்கொண்டார்.
படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்

கௌரவ டாக்டர் பட்டத்துடன் இணைந்த பாராட்டு வாசகத்தைப் படித்த பேராசிரியர் கிஷோர் மெஹ்புபானி, வெப்பம் அடைவதி லிருந்து இந்த பூமியைக் காப்பாற்ற உலகளவில் வலுவான கருத் திணக்கத்தை ஏற்படுத்தியவர் திரு பான் என்றும் இது அவரின் மகத்தான சாதனைகளில் ஒன்று என்றும் குறிப்பிட்டார்.

"இந்த உலகம் கட்டிக்காக்கக் கூடிய பொருளியல், இயற்கை வள மேம்பாட்டு குறிக்கோள்களை 2015ல் திரு பான் தொடங்கினார். இது என்றும் நினைவுகூரப்படும்," என்று பேராசிரியர் தெரிவித்தார்.

'ஐநா மாதர்' என்ற தனிப்பட்ட அமைப்பை 2011ல் உருவாக்கி அதன் மூலம் ஆண், பெண் சமத் துவத்திற்குத் திரு பான் தொண் டாற்றினார் என்பதையும் மாதர் களுக்கு எதிரான வன்செயல் களை ஒடுக்க அவர் பல முயற்சி கள் எடுத்ததையும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.